முருகப்பெருமான் துணை

**மகான் திருமூலதேவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.07.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. கலியெனும் மாயை பிடியில்
கட்டுண்டு தவிக்கும் மானுடமே
அழிவென்று தெரிந்தும் கூட
ஆசாபாச வலைக்குள் அகப்பட்டு
2. அகப்பட்டு அல்லலுறும் மானுடமே
அகன்று பாதுகாப்பு அமைதி
வகைபட மேன்மை கண்டிட
வள்ளலாய் அருளும் குருராசன்
3. குருராசன் பெருமை கூறி
குறையிலா சோபகிருது மிதுனதிங்கள்
உறுதிபட முப்பானோர் திகதி கதிர்வாரம்
**(சோபகிருது வருடம் ஆனி மாதம் 31 ம் நாள், 16.07.2023, ஞாயிற்றுக்கிழமை)**
உரைத்திடுவேன் அறிவுரை ஆசிதனை
4. ஆசிதனை திருமூலதேவர் யானும்
அருளுவேன் மக்கள் பண்புற
வாசிவென்ற ஞானிகளுமே
வழிகாட்டும் புண்ணிய புவியாக இருந்தும்
5. இருந்துமே பொறிபுலன்வழி
இகழ்வு இடரானத்துன்பங்கள்
வருந்தவே தனவழி மனவழியென
வந்துமே சிக்கலை தந்துவர
6. வருகின்ற இந்தநிலை அகல
வளமான பாதுகாப்புக்கான
முருகப் பெருமானை வழிபட்டு
முழுமைதரும் சரவணசோதி ஏற்றி

7. ஏற்றியே நித்ய பூசைகள்
இடைவிடா செய்து வருக
பற்றிய ஆபத்து வினைகள்
பண்பிலா செயல்களும் விலகி

8. விலகியே மாயைக் கடந்து
வினைமுடிந்து ஏகாந்தம்
காலமே தருகின்ற வண்ணம்
கட்டாயம் தருமமுடன் தயவு

9. தயவுபட நடக்கும் அறிவை
தலைவனே என்றாலும் அறிவில்
தயவும் நேருமையும் நின்றிட
தக்கபடி வழிகாட்டும் பூசைபலன்

10. பலனாக அரங்கன் தருமம்
பலமாக வந்து காத்தருளும்
சலனமற வாழ்நாள் தன்னில்
சரணாகதி கொண்டவர்கள் எல்லாம்

11. எல்லாம் எத்தகை நிலையென
எடைபோடும் வல்லமை கூடி
வள்ளல் தன்மை நிறைந்திட
வையகத்தை காத்திட நேரும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–